# யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்தின் இந்திய நூற்சேகரிப்புச் சிறப்புப் பிரிவுச் செயற்றிட்டம்

வி.பிரபாகர்*

**அறிமுகம்**

யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்தில் இந்திய நூல்களைச் சேகரித்து வைப்பதற்கு தனியான பிரிவொன்று (Indian corner) 11.12.2015அன்று ஆரம்பிக்கப்பட்டது. இப்பிரிவின் முக்கிய நோக்கம், பல்கலைக்கழக மாணவர்களின் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்வதாகும். குறிப்பாகக் கலை, இலக்கியம், சமயம், வரலாறு சார்ந்த துறைகளில் மாணவர்கள் எதிர்நோக்கிய நூல் பற்றாக்குறைக்கு தீர்வுகாண இப்பிரிவு உருவாக்கப்பட்டது. மாணவர்கள் தங்கள் ஆய்வுக்கட்டுரைகளுக்கான தகவல்களைப் பெற்றுக்கொள்ள பல நூலகங்களுக்கு செல்ல வேண்டியிருந்தது. இத் தேவையை பூர்த்திசெய்யும் முகமாக ஒரே இடத்தில் இந்தியா தொடர்பான அனைத்து வெளியீடுகளையும் பார்வையிடும் வசதியை வழங்குவது இப்பிரிவின் முக்கிய நோக்கமாக இருந்தது. இந்நூற்சேகரிப்புப்பிரிவு தென்னாசியாவின் பெருமை மிகு அடையாளமாகவும், இந்தியத் தமிழரின் புலமைச் சொத்துக்களின் சேமிப்பு இடமாகவும் விளங்குகிறது. மேலும், இது மாணவர்களின் அறிவுத்தாகத்தைத் தணிக்கும் வரப்பிரசாதமாகவும், ஆய்வாளர்களின் ஆராய்ச்சித் திறனை மேம்படுத்தும் களமாகவும் உருவாக்கப்பட்டுள்ளது.

**செயற்றிட்ட அமுலாக்க படிமுறைகள்**

யாழ்ப்பாணப் பொதுசன நூலகமும் இலங்கைக்கான இந்தியத் தூதரகமும் இணைந்து இந்திய நூற்சேகரிப்புச் சிறப்புப் பிரிவை (Indian corner) உருவாக்கத் திட்டமிட்டன. இதன் முதற்கட்டமாக, இந்தியத் தூதரகத்தால் 15,000 நூல்கள், நூலகத் தளபாடங்கள் என்பன வழங்கியிருந்தமை இத் திட்டத்திற்கு அடிப்படையாக அமைந்தது. இப்பிரிவிற்கான தனி இடம் ஒதுக்கப்பட்டு, உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வாசிப்பு மற்றும் ஆய்வுக்கான சூழல் உருவாக்கப்பட்டது. இந்தியத் தூதரகத்திடமிருந்து பெறப்பட்ட நூல்கள் வகைப்படுத்தப்பட்டு, பொருள் அடிப்படையில் பகுப்பாக்கம் செய்யப்பட்டு, முறையாக இறாக்கைகளில் ஒழுங்கமைத்து வைக்கப்பட்டுள்ளன.

தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பின் கீழ், நூல்களின் விபரங்கள் கணினியில் பதிவேற்றப்பட்டு, தேடல் வசதி உருவாக்கப்பட்டது. சேவைகள் விரிவாக்கத்தின் ஒரு பகுதியாக, இரவல் வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. மற்றும் பிரதியெடுக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டது. நூலக ஊழியர்களுக்கு புதிய முறைகள் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டதுடன், மாணவர்களுக்கு பிரிவின் பயன்பாடு குறித்த விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டது. மேலும், வாசகர்களின் கருத்துக்களைப் பெற்று சேவைகள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டன, மேலும், புதிய நூல்கள் இப்பிரிவில் சேர்க்கப்பட்டன. இத்தகைய விரிவான செயற்பாடுகள் மூலம், இந்திய நூற்சேகரிப்புப் பிரிவு திறம்பட செயற்படுத்தப்பட்டு, மாணவர்கள் மற்றும் பொது மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் உருவாக்கப்பட்டது.

---

**Corresponding Author:* வி.பிரபாகர், நூலகம், சாவகச்சேரி பிரதேச சபை, சாவகச்சேரி, இலங்கை. Email: vilvaprabha@gmail.com

**செயற்றிட்ட அடைவுகள் மற்றும் விதப்புரைகள்**

இந்திய நூற்சேகரிப்புப் பிரிவின் உருவாக்கம் யாழ்ப்பாணத்தின் கல்வி மற்றும் கலாசார வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பை அளித்துள்ளது. பல்வேறு துறைகளுக்கான இந்திய நூல்கள் ஒரே கூரையின் கீழ் கிடைப்பது, மாணவர்களின் நேரம் மற்றும் செலவு என்பவற்றை குறிப்பிடத்தக்க அளவில் சேமிக்க உதவுகிறது. இந்த புதிய வசதியின் காரணமாக, நூலகத்தைப் பயன்படுத்தும் வாசகர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது. குறிப்பாகப் பல்கலைக்கழக மாணவர்களின் வருகை அதிகரித்துள்ளது. இது உயர்கல்வி மாணவர்களுக்கு இந்தியன் கோணர் பிரிவு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது என்பதைக் காட்டுகிறது. இப் பிரிவு கல்வி சார்ந்த தேவைகளை பூர்த்தி செய்வதோடு மட்டுமல்லாமல், கலாசார பரிமாற்றத்திற்கும் உதவுகிறது. இந்திய கலாசாரம் மற்றும் அறிவியல் பற்றிய புரிதல் எம்மவர் மத்தியில் மேம்பட்டுள்ளது. அதே நேரத்தில், இந்திய நாவல்கள் மூலம் பொழுதுபோக்கு வாசிப்பும் ஊக்குவிக்கப்படுகிறது, இது வாசிப்பு பழக்கத்தை மேலும் வளர்க்க உதவுகிறது.

இத்தகைய அனைத்து அடைவுகளையும் ஒன்றிணைத்துப் பார்க்கும்போது, இந்தியன் கோணர் பிரிவு வானது யாழ்ப்பாணத்தின் கல்வி, ஆராய்ச்சி, கலாசார பரிமாற்றம் மற்றும் பொழுதுபோக்கு ஆகிய பல்வேறு அம்சங்களை ஒருங்கிணைத்து, சமூகத்திற்கு பெரும் பயனை அளிக்கிறது.

**முடிவுரையும் பரிந்துரைகளும்**

யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்தின் இந்திய நூற்சேகரிப்புச் சிறப்புப்பிரிவு, பல்கலைக்கழக மாணவர்கள் மட்டுமல்லாது பாடசாலை மாணவர்களது கல்வித் தேவைகளையும் நிறைவேற்றும் முக்கிய மையமாக உருவெடுத்துள்ளது. 2015ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இப்பிரிவு, மாணவர்களின் ஆராய்ச்சித் திறனை மேம்படுத்தி, அறிவார்ந்த சமூகத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்தியத் தூதரகத்தின் ஆதரவுடன் உருவாக்கப்பட்ட இப்பிரிவு, தகவல் அணுகல், நேர மேலாண்மை, வாசகர் எண்ணிக்கை அதிகரிப்பு, கலாசார பரிமாற்றம் மற்றும் ஆராய்ச்சித் தர உயர்வு ஆகிய துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைக் கண்டுள்ளது. எதிர்காலத்தில், சேவை விரிவாக்கம், பன்முகத்தன்மை, தொழில்நுட்ப மேம்பாடு, ஆரோக்கிய மேம்பாடு மற்றும் சமூகத் தாக்கம் ஆகிய துறைகளில் மேலும் முன்னேற்றம் காண எதிர்பார்க்கப்படுகிறது.

நூல்களை எண்ணிம வடிவத்திற்கு மாற்றி ஒரு எண்ணிம நூலகத்தை உருவாக்குவது காலத்தின் தேவையாகும். இது வாசகர்களுக்கு எங்கிருந்தும் எப்போதும் நூல்களை பயன்படுத்த வாய்ப்பளிக்கும். இந்திய மொழிகளை கற்பிக்கும் வகுப்புகளை தொடங்குவதும், பல்வேறு இந்திய மொழிகளில் உள்ள நூல்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதும், மொழி மற்றும் கலாச்சார பரிமாற்றத்தை ஊக்குவிக்கும். இது இலங்கை மற்றும் இந்திய கலாசார இணைப்பை மேலும் வலுப்படுத்தும். கலை, இசை, நடனம் போன்ற துறைகளில் பயிற்சி வகுப்புகளை நடத்துவதும், இந்திய கலாசாரம் தொடர்பான நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதும், கலாசாரப் பரிமாற்றத்தை மேலும் ஆழப்படுத்தும். இது மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் இந்திய கலைகளை நேரடியாக அனுபவிக்கவும் கற்றுக்கொள்ளவும் வாய்ப்பளிக்கும். பொது விரிவுரைகள் மற்றும் கருத்தரங்குகளை நடாத்துவது அறிவுப் பரிமாற்றத்திற்கான ஒரு தளத்தை உருவாக்கும். இது பல்வேறு துறைகளில் இந்தியாவின் முன்னேற்றம் மற்றும் சாதனைகளைப் பற்றி அறிந்துகொள்ள உதவும். ஒளி-ஒலி வளங்களை சேகரித்து, அவற்றை பயன்படுத்தும் வசதிகளை ஏற்படுத்துவது கற்றல் அனுபவத்தை மேலும் மேம்படுத்தும். இது குறிப்பாக மொழி கற்றல் மற்றும் கலாசார புரிதலுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

வாசகர்களின் கருத்துக்களை தொடர்ந்து பெற்று, சேவைகளை மேம்படுத்துவது அவசியமானது. இது இப்பிரிவை வாசகர்களின் மாற்றும் தேவைகளுக்கு ஏற்ப தொடர்ந்து புதுப்பிக்க உதவும். இந்த அனைத்துப் பரிந்துரைகளையும் செயற்படுத்துவதன் மூலம், இப்பிரிவு தனது சேவைகளை மேலும் விரிவுபடுத்தி, மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் அறிவு மேம்பாட்டிற்கு பெரிதும் உதவக்கூடியதாக அமையும். எதிர்காலத்தில், யாழ்ப்பாணத்தின் கல்வி மற்றும் கலாசார வளர்ச்சியில் ஒரு முக்கிய பங்கை இப்பிரிவு வகிக்கும் எனலாம்.

**திறவுச்சொற்கள்:** யாழ்ப்பாணப் பொதுசன நூலகம், இந்திய நூற்சேகரிப்புச் சிறப்புப் பிரிவு, Indian corner